# தகவல் சிற்றேடு (Prospectus)

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள்

1. விண்ணப்பங்களை பெறும் முறை

(அ) செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு சிறைத்துறை இரண்டாம் நிலை ஆண் சிறைக் காவலர் தேர்வு 2007 பற்றிய விளம்பரத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை 21 செ.மீ. x 30 செ.மீ. (Foolscap) அளவில் வெள்ளைத்தாளில் தெளிவாக தட்டச்சு செய்தோ அச்சிட்டோ முழுவதுமாக நிரப்பி விண்ணப்பத்தை இந்த குழுமத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். கணிப்பொறி உபயோகத்திற்காக ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்ப வேண்டும். விண்ணப்பக்கட்டணமாக ரூ. 150/- (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்) க்கான பாரத ஸ்டேட் வங்கி வரைவோலையை சென்னையில் காசாக்க தக்க வகையில் State Bank of India Service Branch 8443 மீது எடுத்து, நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தோடு அனுப்ப வேண்டும். ரூ. 150/- க்கான வங்கி வரைவோலை கீழ்கண்ட பெயருக்கு எடுத்து விண்ணப்பத்தோடு அனுப்ப வேண்டும்.

**"The Chairman, Tamil Nadu Uniformed Services Recruitment Board, Chennai-2"**

(ஆ) விண்ணப்பதாரரால் செலுத்தப்படும் விண்ணப்பக்கட்டணம் (வங்கி வரைவோலை) விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலும் திருப்பித் தரப்படமாட்டாது.

(இ) வங்கி வரைவோலையில் வங்கி மேலாளரின் கையொப்பம், தேதி, முகவரி ஆகியன சரியாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரர் தகவல் சிற்றேட்டினை முழுவதுமாக படித்து பார்த்து விவரங்களை அறிந்து கொண்டு விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யவேண்டும்.

(அ) ஒவ்வொரு விண்ணப்பப் படிவமும் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கருப்பு மை நிரப்பப்பட்ட பேனாவினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் மையினால் தனது கையொப்பத்தினை இடவேண்டும். மேற்குறிப்பிட்டவாறு கையொப்பமிடப்படாத விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நிழற்படம் ஒட்டப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை வங்கி வரைவோலையுடன் உறையில் வைத்து தேர்வுக்குழுமத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தோடு விண்ணப்பதாரரின் முகவரியிட்ட ரூ. 6/-க்கான தபால் வில்லைகள் ஒட்டிய 25 செ.மீ. x 12 செ.மீ. அளவிற்கு குறையாத உறை ஒன்றை இணைத்து அனுப்பவேண்டும்.

(உ) ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பினால் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

(ஊ) ஓர் உறையில் விண்ணப்பதாரர் ஒருவரின் விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு உரிய உறையில் வேறு விண்ணப்பதாரர் எவருடைய விண்ணப்பமும் இணைத்தனுப்பப்படக்கூடாது.

(எ) தேர்வுக்குழும அறிவிக்கை விளம்பரம் / தகவல் சிற்றேடு ஆகியனவற்றில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பப்படிவத்தை சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி, தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் அனுப்புவதும் தேர்வின் ஒரு பகுதியாக அமையும்.

(ஏ) நிர்ணயிக்கப்பட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ விண்ணப்பங்கள் தேர்வுக்குழுமத்திற்கு வந்து சேர வேண்டும். அந்தத் தேதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள், கையொப்பம் இடப்படாத, சரியாகவும் முழுமையாகவும் நிரப்பப்படாத, புகைப்படம் ஒட்டப்படாத, குறிப்பிட்ட தகுதி குறித்து சான்றிதழ் இணைக்கப்படாத, சரியான முகவரி இல்லாத விண்ணப்பங்கள் இந்த விதிமுறைகளிலும், தேர்வுக்குழுமத்தின் அறிவிக்கை விளம்பரத்திலும், தகவல் சிற்றேட்டிலும் காணப்படும் நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறைபாடு உடையனவாகக் கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படும்.

3. தகுதிக்கான பொதுவான நிபந்தனைகள்

(அ) விண்ணப்பதாரரின் குடியுரிமை குறித்து:-

(i) இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(ii) நேபாளம் அல்லது பூட்டான் அரசின் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(iii) இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துடன் 1962 ஜனவரி 1 ஆம் தேதிக்கு முன்பு திபெத்திலிருந்து இந்தியாவிற்கு வந்துவிட்ட அகதியாக இருத்தல் வேண்டும் அல்லது

(iv) இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டு பாகிஸ்தான், பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, உகாண்டா, தான்சானியா ஐக்கியக் குடியரசு (முன்னாள் தங்கனிகா மற்றும் சான்சிபார்), ஜாம்பியா, மாலவி, சயர், எதியோப்பியா ஆகியவற்றின் ஏதாவதொன்றிலிருந்து இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்குடன் இடம் பெயர்ந்து வந்தவராக இருத்தல் வேண்டும்.

(v) மேற்கூறிய மூன்றாம் அல்லது நான்காம் வகையைச் சேர்ந்த பணிவேட்பாளர் அல்லது நேபாளத்தின் அல்லது பூட்டான் அரசின் குடிமகன் ஒருவர் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

(vi) தகுதிச் சான்றிதழ் பெற வேண்டிய பணி வேட்பாளர் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்பட்டு, தேவையான சான்றிதழ் தமிழ்நாடு அரசாங்கத்தால் அவருக்கு வழங்கப்படுவதற்கு உட்பட்டு, அவருக்குத் தற்காலிகமாக நியமனம் வழங்கப்படும்.

(ஆ) ஒழுக்கம் / முன்வரலாறு குறித்து

*(i)* பணி நியமிக்கப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும் (Character), முன்வரலாறும் (Antecedents) அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

*(ii)* காவல்துறை விசாரணையில் விண்ணப்பதாரர் எந்த குற்றவழக்கிலும் ஈடுபட்டவராக இருத்தல் கூடாது. புகார் கொடுத்தவர் பிறழ்சாட்சியாக மாறிவிட்டதன் விளைவாக அல்லது சந்தேகத்தின் பலனை அளித்து தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்டவர் குற்றவழக்கில் ஈடுபட்டவராகவே கருதப்படுவர். காவல்துறையின் தீவிர விசாரணையின் போது குற்றவழக்கில் ஈடுபட்டவர் அந்த வழக்கிலிருந்து மேன்மையாக

விடுவிக்கப்பட்டாலோ (Hon'ble Acquittal), அல்லது தவறான தகவலாக (Mistake of Fact) எடுத்துக் கொள்ளப்பட்டாலோ அந்த நபர் குற்றவழக்கில் ஈடுபடாதவராக கருதப்படுவர். ஆயினும் அவர் அடுத்து வரும் தேர்வில்தான் பங்கு பெற முடியும்.

**(இ) இருதார மணம் குறித்து**

ஆண் விண்ணப்பதாரர் உயிருடன் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது.

**4. திடமான உடல் நலமும் பிறவும்**

(i) விண்ணப்பதாரர், திடமான உடல் நலமும், நலம் பயக்கும் பழக்கவழக்கங்களும் உடையவர் என்றும், பணிக்குத் தகுதியில்லாதவராகச் செய்யும் எந்தவொரு உடற்குறைபாடு அல்லது வலுக்குறைவு இல்லாதவர் என்றும் அவர் தன்னைப் பணியில் நியமனம் செய்யும் அதிகாரியை ஐயமறத் தெளிவுகொள்ளச் செய்ய வேண்டும். மேலும் இத்தேர்வுக்கென அமைக்கப்படும் மருத்துவக் குழுமத்தால் (Medical Board) எல்லாவகையாலும் தகுதியானவர் என்று சான்றளிக்கப்பட வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் தட்டும் முட்டிகள் (Knock Knees) அல்லது வளைந்த கால்கள் (Bow Legs) அல்லது தட்டையான பாதம் (Flat Foot) கொண்டவராக இருத்தல் கூடாது.

**5. பதவிகளின் மொத்த எண்ணிக்கை**

| இனம் | நேரிடைத் தேர்வு | நேரிடைத் தேர்வில் வாரிசுதாரர்களுக்கான 10% ஒதுக்கிடு (முன்னர் நிரப்பப்படாத பின்னடைவு காலியிடங்களையும் சேர்த்து) | தற்போது நிரப்பப்பட வேண்டிய மொத்த காலியிடங்கள் |
|---|---|---|---|
| **ஆண்கள்** | 227 | 127 | 354 |
| | | மொத்தம் | **354** |

**6. ஊதிய விவரம்**

ரூபாய் 2750-70-3800-75-4400 மற்றும் இதர படிகள்.

**7. வயது வரம்பு**

(அ) **01-07-2007** அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் (30-06-1989 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்)

(ஆ) 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (01-07-1983 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

(இ) பிற்படுத்தப்பட்ட (BC), மிகவும் பிற்படுத்தப்பட்ட (MBC), மற்றும் சீர்மரபினர் (DNC), வகுப்பினைச் சார்ந்தவர்கள்:- 01-07-2007 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1981 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)

(ஈ) **ஆதி திராவிடர் (SC) / பழங்குடியினர் (ST) வகுப்பினைச் சார்ந்தவர்கள்:-** 01-07-2007 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும்; 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1978 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

(உ) **முன்னாள் இராணுவத்தினர்** :-

- **(i)** 01-07-2007 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01-07-1962 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)

- **(ii)** முன்னாள் இராணுவத்தினர் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இவ்வறிவிக்கை வெளிவந்த தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

- **(iii)** இராணுவத்தில் வாகன ஓட்டுனர் (Driver)/ தானியங்கி கம்மியர் (Auto Mechanic) தானியங்கி மின் வினைஞர் (Auto Electrician) மற்றும் படைகலன் பழுது பார்ப்போர் (Armourers) ஆக பணிபுரிந்தோருக்கு உடல் கூறு அளத்தல், உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test) மற்றும் உடல் திறன் போட்டிகள் கிடையாது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்கள் அவர்களின் அசல் சான்றிதழ்களை, சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது சரிபார்ப்பதற்காக கொண்டுவர வேண்டும்.

- **(iv)** கோரிக்கைக்கு ஆதாரமாக அவரது பணி விடுப்புச் சான்றிதழிலிருந்து (Discharge Certificate) தகுந்த முறையில் எடுக்கப்பட்டு உறுதியொப்பமிட்ட (Attested) எடுகுறிப்பை (Extract) பின்வரும் படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| (1) | பணிவேட்பாளரின் பெயர் |
| (2) | வகித்த பதவி |
| (3) | படையில் சேர்ந்த தேதி |
| (4) | விடுவிக்கப்பட்ட தேதி |
| (5) | விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள் |
| (6) | இராணுவத்தில் வேலை பார்த்த போது நடத்தையும், ஒழுக்கமும் |

8. உடல் அளவுகள்

(அ) **ஆண்:**

(i) **உயரம்:** குறைந்த அளவு 168 செ. மீட்டர் இருக்க வேண்டும்.
**ஆதி திராவிடர் / பழங்குடியினர்:-** உயரம் குறைந்த அளவு 165 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

(ii) **மார்பளவு:-** அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் 81 செ. மீட்டர் இருக்க வேண்டும்.
மூச்சடக்கிய மார்பு விரிவாக்கம் (Expansion) குறைந்த அளவு 5 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

9. குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி

(i) பழைய பாடத்திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தின்படி 10ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

<u>குறிப்பு</u>

ஒரு நபர் தமிழ்நாடு திறந்த வெளிப் பள்ளிக் குழுமத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் பள்ளி இறுதித் தேர்வில் அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

10. சமமான கல்வித் தகுதி

விண்ணப்பதாரர் பெற்றுள்ள தகுதிகள் நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளவையாக இல்லாவிட்டாலும் அவற்றிற்குச் சமமாக அவை இருப்பதாக அவர் உரிமை கோரினால், அதனை நிருபிக்கும் பொருட்டு விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடனேயே சான்றிதழ் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

11. தமிழில் தகுதி

(i) விண்ணப்பதாரர் தமிழில் பேச, படிக்க மற்றும் எழுத அறிவிக்கை நாளன்று, நிறைவான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.

*(ii)* ***விளக்கம்***

*கீழ்காணும் தகுதியை பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழறிவு பெற்றவராகக் கருதப்படுவார்.*

*பள்ளியிறுதிப் பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் **அல்லது** உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பள்ளியிறுதிப் பொதுத் தேர்வைத் தமிழில் எழுதித் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் **அல்லது** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு)* (Second Class Language Test ) *தமிழில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.*

*(iii)* ***குறிப்பு:***

*போதுமான தமிழறிவு இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் தேர்வு பெற்று பணியில் நியமிக்கப்பட்டால், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழில் தமிழ்நாடு அரசுத் தேர்வாணயத்தால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறாதவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.*

***12. இதர நிபந்தனைகள்***

*(i) விண்ணப்பதாரர் ஒருவர் பணிக்குத் தேர்வுக் குழுமம் தேர்ந்தெடுப்பதாலேயே அவர் அப்பதவியில் நியமிக்கப்படுவதற்கு உத்தரவாதமளிப்பதாகாது.*

*(ii) விண்ணப்பத்தை தாக்கல் செய்த பிறகு ஒரு விண்ணப்பதாரர், தான் ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் என்றோ அல்லது ஓர் உயர்ந்த அல்லது கூடுதல் கல்வித் தகுதி பெற்றவர் என்றோ அல்லது வயதில் மாற்றம் செய்ய வேண்டும் என்றோ அவரால் எழுப்பப்படும் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*(iii) விண்ணப்பங்களில் கொடுக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்கள் கோரும் வயது, சமூகப்பிரிவு மற்றும் கல்வித் தகுதிகள் ஆகியவை ஏற்கப்படுகின்றன. எனவே, மேற்சொன்ன தகவல்களைத் தேர்வுக் குழுமம் ஐயமறத் தெளிந்து கொள்ளும் வரை அவர்களின் விண்ணப்பங்கள் தற்காலிகமாக மட்டுமே ஏற்கப்படும். தேர்விற்கு அனுமதிக்கப்படுவதால் அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக அவரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமையளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, எல்லா நிலைகளிலும் விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, விண்ணப்பத்தினை நிராகரிக்கும் உரிமை இத் தேர்வுக் குழுமத்திற்கு உண்டு.*

(iv) தேர்வு எழுத தகுதியுடையவர் என்று கருதும் விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பம் செய்து தமது சுயப்பொறுப்பில்தான் தேர்வினை எழுதுகிறார்கள். எனவே, தேர்வு எழுதுவதற்கு முன்னால் பதவிக்குரிய அறிவிக்கை நாளன்று விதிகளில் உள்ளபடி வயது, கல்வித் தகுதி முதலிய அனைத்து நிபந்தனைகளையும் தாம் நிறைவேற்றுவதை விண்ணப்பதாரர்கள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும். தகுதியில்லாத விண்ணப்பதாரர்களின் பணிவேட்புத் தகுதி, தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பும் கூட ரத்து செய்யப்படதக்கது.

(v) நியமனத்திற்கு போட்டியிட தகுதியுடையவர் எனத் தேர்வுக் குழுமத்தால் கருதப்படும் பணிவேட்பாளர், சென்னை அல்லது இம்மாநிலத்தின் வேறு ஏதேனும் மையத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டால் அவர் தனது சொந்த செலவில் வருவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

13. நியமன ஒதுக்கீடு

(அ) ஆதிதிராவிட வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடுகள் விதி பொருந்துகின்ற இடத்திலெல்லாம், ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை வரை எந்த அளவு தகுதியுள்ள பணி வேட்பாளர்கள் கிடைக்கின்றார்களோ அந்த அளவு தெரிவு செய்யப்படும்.

(ஆ) ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த பணிவேட்பாளர்களும், பொதுமுறைகளின் (General Turns) மூலம் நிரப்பப்படும் காலியிடங்களுக்குத் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர். அவ்வாறு பொதுமுறைகள் மூலம் நிரப்பப்படும் காலியிடத்திற்கு தகுதியின் அடிப்படையில் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவரது வகுப்புக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடத்தின் எண்ணிக்கை எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

(இ) ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் பட்டியல்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள்:-

(i) தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, இணைப்பில் காணும் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றை சேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே அவ்விண்ணப்பதாரர்கள் ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று கருதப்படுவர். பிறமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

(ii) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்து மதத்திலிருந்து கிருஸ்த்துவர்களாக மதம் மாறியவர்கள் 24/02/1986 முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக கருதப்படுவார்கள்.

(iii) ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் கிருத்துவ மதத்திற்கு மாறிய பிறகு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படாமல் பிற்பட்ட வகுப்பினராக மட்டுமே கருதப்படுவார்.

(ஈ) தமிழ்நாடு சிறைத்துறை பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ளோருக்கு சிறப்பு ஒதுக்கீடு:

பணிபுரியும் தமிழ்நாடு சிறைத்துறை பணியாளர்கள் மற்றும் ஒய்வு பெற்ற, இறந்த மற்றும் மருத்துவரீதியாக தகுதியின்மைப் பெற்ற சிறைத்துறை பணியாளர்களின் வாரிசுகளுக்கு 10 சதவீதம் ஒதுக்கப்படும். மேற்படி 10 சதவீத ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டாக 10 சதவீதம் பணியிலுள்ள அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ளோரைக் கொண்டு நிரப்பப்படும். ஏற்கனவே பணியிலிருந்து வருவாய் ஈட்டுபவர்கள், சிறைத்துறை பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை சார்ந்திருப்பதாக கருதமுடியாது. ஏற்கனவே வாரிசுச் சான்று மூலம் பணிபெற்றவர்களுக்கு மறுபடியும் அந்தச் சலுகை அளிக்கப்படமாட்டாது.

14. சான்றுகள் தாக்கல் செய்தல்

(அ) (i) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் A அல்லது B நிலை அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட (Attested) சான்றிதழ்களின் நகல்களை அனுப்ப வேண்டும்.

(ii) எனினும் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களுக்குச் சான்றாக இருக்கும் மூலச்சான்றுகளை தேர்வில் கலந்து கொள்ளும் பொழுதோ அல்லது தேர்வுக் குழுமம் கேட்கும் தருணத்திலோ தாக்கல் செய்தல் வேண்டும்.

(ஆ) பிறந்த தேதிக்கான சான்று

(i) உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான (Transfer Certificate) சான்றிதழ் (S.S.L.C.) அல்லது

(ii) பல்கலைக்கழகத்தின் அல்லது கல்லூரியின் அல்லது பள்ளியின் ஆவணங்களில் கண்டுள்ளவற்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி அல்லது பள்ளி அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட பிறந்த தேதியை காட்டுகிற சான்றிதழ் (ஞானஸ்தான (Baptism) சான்றிதழ்) அல்லது பிறப்புப் பதிவேட்டின் எடுகுறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) அல்லது

(iii) மாநில அரசின் கீழ் முறையான பணியில் உள்ள விண்ணப்பதாரர்களின் பணி பதிவேட்டிலிருந்து அவர்களுடைய பிறந்த தேதிக்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட எடுகுறிப்பு.

(இ) கல்விச் சான்று

<u>குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி</u>

(i) பழைய பாடத்திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி அல்லது
(ii) புதிய பாடத்திட்டத்தின்படி 10ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

<u>குறிப்பு</u>

ஒரு நபர் தமிழ்நாடு திறந்த வெளிப் பள்ளிக் குழுமத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் பள்ளி இறுதித் தேர்வில் அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

(iii) <u>சமமான கல்வித் தகுதி</u>

விண்ணப்பதாரர் பெற்றுள்ள தகுதிகள் நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளவையாக இல்லாவிட்டாலும் அவற்றிற்குச் சமமாக அவை இருப்பதாக அவர் உரிமை கோரினால், அதனை நிரூபிக்கும் பொருட்டு விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடனேயே சான்றிதழ் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(iv) போதிய தமிழறிவு பெற்றிருப்பதாகக் கோரும் விண்ணப்பதாரர் அவருடைய தாய்மொழி தமிழாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர் பள்ளியிறுதிப் பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்துப் படித்திருந்தாலோ அல்லது மொழி அல்லாத மற்ற எல்லா பாடங்களையும் தமிழில் படித்திருந்தாலோ அல்லது இரண்டாம் மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சிப் பெற்றிருந்தாலோ அதன் சான்றிதழ்களை அனுப்ப வேண்டும்.

(ஈ) சாதிச் சான்றிதழ்

(i) ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் 02/05/1988 ஆம் ஆண்டு நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 781 ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை அனுப்ப வேண்டும்.

| வ. எண். | சாதியின் பெயர் | சாதி சான்றிதழ் வழங்க தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|
| 1. | பழங்குடியினர் | வருவாய் கோட்ட அலுவலர்/மாவட்ட உதவி ஆட்சியர்/மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)/மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 2. | ஆதிதிராவிடர் வகுப்பினர் | வட்டாட்சியர் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | வட்டாட்சியர் நிலைக்கு குறையாத வருவாய்த் துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணை வட்டாட்சியர்/கூடுதல் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர். |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜ கம்பளம், கொல்லவர், சில்லவர் தொக்களவர், தொழுவ நாயக்கர் உட்பட) | தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் |

(ii) விண்ணப்பதாரரின் நிரந்தர குடியிருப்பு எல்லைக்குட்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரி நேரில் கேட்டறிந்த பிறகும் முறையாக ஆய்வு செய்த பிறகும் சாதிச் சான்றிதழை வழங்கியிருக்க வேண்டும். 02/05/1988-ம் நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை எண் 781-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்களும் உயர் நிலைப்பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச் சான்றிதழ் அல்லது பள்ளிச்/கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**(iii)** *தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாதி, இந்த விதிமுறைகளின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டுள்ள வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால், அப்பணிவேட்பாளர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக கருதப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் அவர்கள் ஏனையோர்கள் (*Others*) என்ற பிரிவின் கீழ் மட்டுமே கருதப்படுவார்கள். மேலும் ஏனையோர்கள் என்ற பிரிவின் கீழ் அவர்கள் கருதப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றால் அவர்களுடைய விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.*

**(iv)** *சாதிச் சான்று (அரசாணை நிலை எண் 2137 ஆதி திராவிடர்/பழங்குடி நலத்துறை, நாள் 11/11/1989-ன் படி பழங்குடி வகுப்பை சார்ந்தவர்கள், வருவாய் கோட்டாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் நகலை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.*

*11/11/1989 -க்கு முன்னர் தாசில்தார்களால் வழங்கப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்தவருக்கான சாதிச் சான்றிதழின் நகலை சமர்ப்பித்தாலும் செல்லுபடியாகும்.*

*(உ) (i) இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பின் அதற்கான சான்று. (Discharge Certificate).*

*(ii) இராணுவத்தில் வாகன ஓட்டுனர்/தானியங்கி கம்மியர் / மின் வினைஞர்/ படைகலன் பழுதுபார்ப்போர் ஆக பணிபுரிந்திருப்பின் அதற்கான சான்று.*

*(ஊ) (i)* ***<u>வாரிசு உரிமை கோரும் சான்றிதழ் (Wards Certificate)</u>***

*சிறைத்துறை பணியிலிருக்கும், பணியிலிருந்து ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் மருத்துவரீதியான தகுதியின்மை பெற்றவர்கள் மற்றும் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகள் எனில் அதற்குரிய சான்று. சிறைத்துறை பணியாளரின் வாரிசு என்பதற்கான சான்றிதழை கண்காணிப்பாளர் தரத்தில் உள்ள அதிகாரியிடமிருந்து பெற்று விண்ணப்பப்படிவத்தோடு இணைக்காவிட்டால் அந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*(ii) வாரிசு ஒதுக்கீட்டின் கீழ் உரிமை கோரும் விண்ணப்பதாரர்கள் மற்றும் ஏற்கெனவே இதர அரசுப் பணிகளில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பம் தொடர்பாக ஏதேனும் முறையீடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட துறை மூலமாக நிவர்த்தி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.*

(iii) அரசாணை எண் 352 (உள் துறை) (சிறை-II) தேதி 25/04/2003 ன் படி

1) தமிழ்நாடு சிறைத் துறையில் பணிபுரிபவர்கள்
2) பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள்
3) இறந்து விட்டவர்கள்
4) மருத்துவக் காரணங்களுக்காக கட்டாய ஓய்வு பெற்றவர்கள்

ஆகியோரின் பிள்ளைகள் மற்றும் சார்ந்திருப்போர்கள் வாரிசுதாரர்களாக கருதப்படுவர்.

5) தமிழ்நாடு சிறைத் துறையில் அமைச்சுப் பணியில் பணி புரிபவர்களின் பிள்ளைகளுக்கும் இச்சலுகை உண்டு.

<u>குறிப்பு</u> : பணியிலிருந்து கட்டாய ஓய்வு (Compulsory Retirement) அளிக்கப்பட்டவர்களின் வாரிசுகளுக்கு வாரிசுதாரர்களுக்கான சலுகை அளிக்கப்படமாட்டாது.

## (iv) <u>வாரிசு உரிமை கோரும் சான்றிதழ்</u>

### <u>மாதிரிப் படிவம்</u>

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : |
| 2. | யாருடைய வாரிசாக விண்ணப்பதாரர் கோருகிறாரோ அவரது பெயர் | : |
| 3. | அன்னார் சிறைத் துறையில் வகிக்கும் / வகித்த பதவி, இடம் | : |
| 4. | அன்னார் இறந்துவிட்டிருப்பின் அல்லது மருத்துவக் காரணங்களுக்காக கட்டாய ஓய்வு பெற்றிருப்பின், அவர் கடைசியாக வகித்த பதவி, இடம். | : |

<u>மேற்குறிப்பு எண்</u> <u>நாள்:</u>

1. இவரது விண்ணப்பம் என்னால் பரிசீலிக்கப்பட்டது.

2. திரு ____________________ க்கு ____________________ என்பவரின் வாரிசு என்ற முறையில் விண்ணப்பதாரரை வாரிசுதாரராகக் கருதி வாரிசுதாரரின் உரிமை கோருபவராக (Wards Quota)-ன் கீழ் இத்தேர்வுக்கு பரிசீலிக்கலாம் என்று பரிந்துரை செய்கிறேன்.

இடம்: அலுவலகம் கையொப்பம்

பதவியின் பெயர்

நாள் :

(எ) (i) ***தடையின்மைச் சான்றிதழ்***

***இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியிலுள்ளவர்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் அல்லது பல்கலைகழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஓரளவு அரசு சார்புள்ள நிறுவனங்களில் (Quasi-Government) வேலையில் நிரந்தரப் பணியிலாவது அல்லது தற்காலிகப்பணியிலாவது உள்ளவர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை தகுதி பெற்ற அதிகாரியின் மூலமாகவோ அல்லது துறைத் தலைவரின் வாயிலாகவோ அனுப்ப வேண்டும்.***

(ii) ***இவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள படிவத்தில் தமது பதவிக்கு அடுத்த உயர் நிலைக்குக் குறையாத மேலதிகாரியிடமிருந்து "விண்ணப்பத்தை ஏற்க தடையில்லை"*** (No Objection Certificate) ***என்ற சான்றிதழினை கீழ் கண்டவாறு அனுப்ப வேண்டும்.***

---

***துறைத் தலைவர் அல்லது அலுவலகத் தலைவர் அல்லது வேலைக்கு அமர்த்தியவர் அளிக்கும் சான்றிதழ்***
***(மாதிரிப் படிவம்)***

| | | |
|---|---|---|
| 1. | *விண்ணப்பதாரர் பெயர்* | : |
| 2. | *வகிக்கும் பதவியின் பெயர்* | : |
| 3. | *விண்ணப்பதாரர் அவசர விதிகளின் கீழ் தற்காலிகமான பணியாளரா - அல்லது விண்ணப்பதாரர் மாநில அல்லது சார் நிலைப் பணிகளில் தகுதி காண் பருவத்தினரா - அல்லது தகுதி காண் பருவம் முடிந்து ஒப்பளிக்கப்பட்டவரா – அல்லது நிலை உறுப்பினரா –* | : |
| 4. | *பணியாற்றிய காலம்* | *முதல் (நாள்)* *வரை (நாள்)* |

*மேற்குறிப்பு எண்* *நாள்*

1. ***இப்பதவிக்கான இவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் எனக்கு மறுப்பில்லை.***
2. *திரு ............................................ க்கு கீழ்கண்ட தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன/ தண்டனை ஏதும் விதிக்கப்பட்டிருக்கவில்லை என்று சான்றளிக்கப்படுகிறது.*

***இடம் :*** ***அலுவலகம்*** ***கையொப்பம்***

***நாள் :*** ***பதவியின் பெயர்***

---

***குறிப்புகள்:-***

(iii) *தேர்வுக் குழுமத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிய பிறகு தேர்விற்கு அழைப்பதற்கான / சரிபார்த்தலுக்காக மூலச்சான்றுகளை அனுப்புவதற்கான தகவல் பெறப்பட்டதற்கு முன்புமான இடைப்பட்ட காலத்திற்குள் பணி நியமனம் பெற்ற விண்ணப்பதாரர்களும் தடையின்மைச் சான்றிதழ்களை அனுப்ப வேண்டும்.*

(iv) தடையின்மைச் சான்றிதழை அனுப்பிய நாளிற்கும் பணியமர்த்தப்பட்ட நாளிற்கும் இடைப்பட்ட காலத்தில் விண்ணப்பதாரர் மீது குற்றவியல் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது அவர் தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ அவ்விவரங்களை விண்ணப்பதாரர் தன் பதிவு எண்ணுடன் உடனடியாக தேர்வுக் குழுமத்திற்கு தெரிவித்தல் வேண்டும்.

15. நிழற்படத்தின் நகல்கள்

(அ) விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய கடவுச்சீட்டு (Passport Size) அளவு நிழற்படத்தினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்ட நிழற்ப்படத்தினைப் போன்ற மற்றொரு நிழற்படத்தினை தேர்வின் போதோ அல்லது கேட்கப்படும் போதோ கொடுக்க வேண்டும்.

<u>குறிப்பு:-</u>

(ஆ) நிழற்படங்கள் விண்ணப்ப தேதிக்கு முன் ஒரு மாதத்திற்குள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கீழ்காணும் நிழற்படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(i) இவ்வலுவலக முத்திரை அல்லது வேறு அலுவலக முத்திரை பதிக்கப்பட்ட நிழற்படங்கள்.

(ii) கிழிந்து வீணான நிழற்படங்கள்

(iii) வேறு விண்ணப்பத்திற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நிழற்படங்கள்

(iv) வெவ்வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட நிழற்படங்களின் நகல்கள்.

(v) நிழற்பட அச்சுக்கட்டைகள் (Blocks) அல்லது அச்சுப்பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள்.

(vi) நிழற்படத்தின் நிழற்படி நகல்கள் (Photostat Xerox Copy).

16. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் மற்ற விதிகள்:-

(i) தெரிந்தெடுக்கப்படாமைக்கான காரணங்களை கேட்டும் வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்க கோரியும் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ii) விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்படும் முறையீடுகளுக்கு மட்டுமே சட்டத்திற்குட்பட்டு தேவைப்படின் பதிலளிக்கப்படும். வழக்கறிஞர் அல்லது பிரதிநிதி பெயர்களில் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(iii) எழுத்துத் தேர்வில் தோல்வி அடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்கு காரணங்கள் கேட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. எழுத்துத் தேர்வு விடைத்தாள்கள் கணினியின் மூலம் திருத்தப்படுவதால் விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டா.

(iv) தேர்வின் முதல் நிலையான எழுத்துத் தேர்வின் முடிவு குறித்து செய்தித் தாள்களில் செய்தி வெளியிட்டபின் முழு விபரமும் தேர்வுக் குழுமத்தின் இணையதளத்தில் (Website: www.tn.gov.in/tnusrb) வெளியிடப்படும்.

(v) எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்கு அடுத்த கட்ட தேர்வு குறித்து கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

(vi) எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று பின்னர் நடைபெறும் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று இறுதியாக தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் விபரமும், எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் தேர்வுக் குழுமத்தின் இதே இணையதளத்தில் வெளியிடப்படும்.

17. தகுதியின்மை / விலக்கி வைத்தலுக்கான காரணங்கள்

அ) <u>தகுதியின்மை (Disqualification)</u>

(i) தேர்வுக் குழுமத்தின் தலைவரிடமோ அல்லது உறுப்பினரிடமோ அவரது ஆதரவை பெற நேர்முகமாகவோ அல்லது கடிதத்தின் மூலமாகவோ அல்லது எவரேனும் ஓர் உறவினர் / நண்பர் / காப்பாளர் / அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சித்தல்.

(ii) தாராளமாக மதிப்பீடு செய்யும்படியோ அல்லது அதிக மதிப்பெண் வழங்கும்படியோ அல்லது பரிவுகாட்டும்படியோ விடைத்தாள்களில் தேர்வாளர்களுக்கு முறையீடுகள் எழுதுதல்.

(iii) வினாவிற்கு தொடர்பில்லாதவைகளை விடைத்தாள்களில் எழுதுதல்.

(iv) விடைத்தாள்களில் தனது அடையாளத்தை தெரிவிக்கும் வகையில் ஏதேனும் குறியீடுகள் ஏற்படுத்துதல்.

ஆகியவை விண்ணப்பதாரர் அத்தேர்விற்கு தகுதியற்றவராக ஆக்கப்படுவதற்கான காரணங்கள்.

ஆ) விலக்கி வைத்தல் (Suspension) –க்கான காரணங்கள்:-

(i) ஆவணங்களிலும், சான்றிதழ்களிலும் காணப்படும் எவ்வித திருத்தங்கள் அல்லது மோசடியாக மாறுதல் செய்தல் ஆகியவற்றிற்கு காரணமாக உள்ள விண்ணப்பதாரர்கள், தேர்வுக் குழுமம் நடத்தும் தெரிவுகள் மற்றும் தேர்வுகளில் கலந்துக் கொள்ளும் உரிமையை இழக்க நேரிடும். மேலும், இதன் விளைவாக அரசுப் பணியில் சேர்வதற்கான உரிமையையே இழக்க நேரலாம்.

(ii) பணிவேட்பாளர்கள் அவர்களுடைய கல்வித் தகுதிகள் அல்லது பல்வேறுபட்ட பாடங்களில் பெற்ற தேர்ச்சியின் தன்மை அல்லது அவர்களுடைய மதம் அல்லது சாதி முதலியன பற்றி அவர்களுடைய விண்ணப்பத்தில் தவறான தகவல்களைக் கொடுத்தல்.

(iii) கீழ்கண்ட உண்மைகளை மறைத்தல்

(அ) விண்ணப்பதாரர் குற்ற வழக்கிற்காக கைதானது / குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, மைய அல்லது மாநில தேர்வாணையத்தால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.

(ஆ) ஏதேனும் கிளர்ச்சி அல்லது வன்முறைச் செயல்களில் ஈடுபட்டது.

இ) தேர்வுக்கூடத்தில் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள்

(i) தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல்.

(ii) மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுத அனுமதித்தல்.

(iii) அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையினால் எழுதப்பட்ட அனுமதிக்கப்படாத புத்தகங்கள் அல்லது குறிப்புகளிலிருந்து பார்த்து எழுதுதல்.

- ஆகியவைகளாலும் விண்ணப்பதாரர் தேர்வுக் குழுமம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் அவர்களின் உரிமையை தேர்வுக் குழுமம் முடிவு செய்யும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

## 18. அழைப்புக் கடிதம் (Call Letters)

இத்தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள், தேர்வு மையங்கள், தேர்வு நாள், தேர்வு நேரம் ஆகிய விவரங்களுடன் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும்.

## 19. தேர்வு முறைகள்

### i) எழுத்துத் தேர்வு

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அனைவரும் முதலில் எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துத் தேர்வு கீழ்கண்டவாறு இருக்கும்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது அறிவு/குறியிடுதல் முறையில் (தமிழில்) | : | 50 மதிப்பெண்கள் |
| 2. | உளவியல் (மனோ தத்துவ) தேர்வு குறியிடுதல் முறையில் (தமிழில்) | : | 30 மதிப்பெண்கள் |
| | மொத்தம் | : | 80 மதிப்பெண்கள் |

(1) பொது அறிவுத்தேர்வு பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தரத்திற்கு இருக்கும், (2) உளவியல் தேர்வு தேர்வாளரின் இயற்கையான ஆற்றலையும் மனோபாவத்தையும் சோதிப்பதாய் இருக்கும், (3) ஒரே கேள்வித்தாளில் பகுதி "அ" பொது அறிவு வினாக்களையும், பகுதி "ஆ" உளவியல் வினாக்களையும் கொண்டதாக எழுத்துத் தேர்வு இருக்கும் (4) <u>எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 40 மதிப்பெண்கள் பெற வேண்டும்.</u>

### ii) <u>அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல்:-</u>

எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டுமே அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். விண்ணப்பத்துடன் அனுப்பிய சான்றிதழ்களின் <u>அசல்கள்</u> அனைத்தையும் தேர்வு மையத்திற்கு குறிப்பிட்ட தேதியில் சரிபார்ப்பதற்காக அவசியம் கொண்டுவர வேண்டும். என்.சி.சி., என்.எஸ்.எஸ் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பெற்ற உரிய சான்றிதழ்களை விண்ணப்பதாரர்கள் கொண்டு வந்தால் அவை உடல் திறன் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும் பரிசீலிக்கப்பட்டு இக்குழுமம் வகுத்துள்ள வரைமுறைகளின் படி மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**iii)** **<u>உடல் கூறு அளத்தல் (Physical Measurement Test):</u>** கல்வி, வயது ஆகியவற்றில் தகுதியுடையவர்கள் மட்டும் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர், உடல்கூறு அளத்தலில் தேர்வு பெற்றவர்கள் உடல் தாங்கும் திறனறித் (Endurance) தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

**iv)** **<u>உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test):</u>**

**i)** ஆண் விண்ணப்பதாரர்கள் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடிக்க வேண்டும், இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

**v)** <u>உடல் திறன் தேர்வுகள் (Physical Efficiency Test):</u> **உடல் தாங்கும் திறனறித் தேர்வில் தகுதியுடைவர்கள் மட்டும் கீழ்க்காணும் உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்:-**

| வ. எண். | ஆண்கள் | | |
|---|---|---|---|
| | தேர்வுகள் | 1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள் | 2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள் |
| 1. | கயிறு ஏறுதல் | 5 மீட்டர்கள் | 6 மீட்டர்கள் |
| 2. | நீளம் தாண்டுதல் (அல்லது)<br>உயரம் தாண்டுதல் | 3.80 மீட்டர்கள்<br>1.20 மீட்டர்கள் | 4.50 மீட்டர்கள்<br>1.40 மீட்டர்கள் |
| 3. | 100 மீட்டர் ஓட்டம் (அல்லது)<br>400 மீட்டர் ஓட்டம் | 15.0 வினாடிகள்<br>80.0 வினாடிகள் | 13.5 வினாடிகள்<br>70.0 வினாடிகள் |

**<u>ஆண் தேர்வாளர்கள்:-</u>** மேலே குறிப்பிட்டுள்ள **3 தேர்வுகளில் கயிறு ஏறுதல் ஆண் தேர்வாளர்கள் அனைவருக்கும் கட்டாயமாகும்.** மீதமுள்ள 2 தேர்வுகளில் ஏதேனும் ஒரு தாண்டுதல் மற்றும் ஏதேனும் ஒரு ஓட்டப்பந்தயத் தேர்வினை விருப்பப்படி தேர்ந்தெடுக்க வேண்டும். மேற்படி 3 தேர்வுகளில். தலா ஒவ்வொரு தேர்விலும் குறைந்தது ஒரு நட்சத்திரத் திறனுடன் மொத்தம் குறைந்தது 6 மதிப்பெண்கள் பெற வேண்டும். 6 மதிப்பெண்கள் பெறாதவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். **நீளம் / உயரம் தாண்டுதல் தேர்வுகட்க்கு மட்டும் 2 வாய்ப்புகள் அளிக்கப்படும், கயிறு ஏறுதல் மற்றும் ஓட்டப்பந்தயம் ஆகியவற்றிற்கு ஒரு வாய்ப்பு மட்டுமே அளிக்கப்படும். கயிறு ஏறும் பொழுது கைகளைத் தவிர, கால்களோ, உடலின் வேறெந்த பாகங்களோ கயிற்றின் மீது பட்டால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.**

20. எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் **:**

**(i)** பொது அறிவுத் தேர்வில் 10 வகுப்பு பாடத்திட்டத்திற்கு உட்பட்ட தமிழ், அறிவியல், இந்திய வரலாறு, இந்தியப் புவியியல், இந்திய அரசியலமைப்பு, நாட்டு நடப்புகள், விளையாட்டுக்கள் மற்றும் அதை சார்ந்தவர்கள், இவை அனைத்திலும் குறிப்பாக இந்தியா தொடர்புடையவை பற்றிய கேள்விகள் கேட்கப்படும்.

(ii) *உளவியல் தேர்வில்* Test of Reasoning (Logical, Verbal), Numerical ability, Analytical ability *(பகுத்தாயும் திறன்) மற்றும் மனோ தத்துவத்தைச் சார்ந்த கேள்விகள் கேட்கப்படும்.*

*21.* ***மதிப்பெண்களின் ஒதுக்கீடு:***

| | | |
|---|---|---|
| *(அ)* | *எழுத்துத் தேர்வு பொது அறிவு மற்றும் உளவியல் (மனோதத்துவ)தேர்வு (தமிழில்) குறியிலக்கு முறையில்* | **: 80** ***மதிப்பெண்கள்*** |
| *(ஆ)* | *உடல்திறன் போட்டிகள்* **(Physical Efficiency Test)** | **: 15** ***மதிப்பெண்கள்*** |
| *(இ)* | *பிற சான்றிதழ்கள் (என்.சி.சி. என்.எஸ்.எஸ். & விளையாட்டு)* | **: 5** ***மதிப்பெண்கள்*** |
| | *மொத்தம்* | **:100** ***மதிப்பெண்கள்*** |

22. என்.சி.சி. / என்.எஸ்.எஸ். / விளையாட்டுகள் / தடகளபோட்டிகள் ஆகியனவற்றிற்கு வழங்கப்படும் மதிப்பெண்கள் பற்றிய விவரங்கள்:

| | மதிப்பெண்கள் |
|---|---|
| **(அ) என்.சி.சி.** | |
| (i) ஓராண்டு உறுப்பினர் | ½ |
| (ii) "B" சான்றிதழ் | 1 |
| (iii) "C" சான்றிதழ் / சார்பு அலுவலர் / அகில இந்திய அளவில் சிறந்த மாணவர். | 2 |
| **(ஆ) என்.எஸ்.எஸ்** | |
| (i) திட்டசெயல் தொண்டர்கள் | ½ |
| (ii) புதுதில்லியில் நடைபெறும் குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்பு, மாநில அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையில் நடத்தப்படும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் ஊக்கப்படுத்தும் முகாம்கள், மாநிலங்களுக்கு இடையேயான இளைஞர்களுக்கான பரிமாற்ற நிகழ்வுகள். | ½ |
| (iii) தேசிய சமுதாயப்பணி திட்டத்தின் தலைவர் / சிறந்த மாணவர். | 1 |
| **(இ) விளையாட்டுக்கள் / தடகளப் போட்டிகள்** | |
| (i) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளில் பல்கலைக்கழக அளவில் பங்கேற்பு (படிவம்-III பெற்று உள்ளவர்) | ½ |
| (ii) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளில் மாநில அளவில் பங்கேற்பு (படிவம்-II பெற்று உள்ளவர்) | 1 |
| (iii) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளில் தேசிய அளவில் பங்கேற்பு (படிவம்-I பெற்று உள்ளவர்) | 2 |

(ஈ) **அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகள்**

1. கூடைபந்து, 2. கால்பந்து, 3. ஆக்கி, 4. கைப்பந்தாட்டம், 5. எறிபந்தாட்டம், 6. கபடி, 7. மல்யுத்தம், 8. குத்து சண்டை, 9. ஜிம்நாஸ்டிக்ஸ், 10. ஜூடோ, 11. பளு தூக்குதல், 12. நீச்சல் போட்டி, 13. தடகளப் போட்டிகள்., 14. குதிரையேற்றம்.

குறிப்பு:-

என்.சி.சி.க்கு அதிகபட்சமாக இரண்டு மதிப்பெண்களும் / என்.எஸ்.எஸ்.க்கு அதிகபட்சமாக ஒரு மதிப்பெண்ணும் மற்றும் விளையாட்டு / தடகளபோட்டிகள் ஆகியனவற்றிற்கு அதிகபட்சமாக 2 மதிப்பெண்களும் என மொத்தம் 5 மதிப்பெண்கள் மட்டும் வழங்கப்படும்.

23. மதிப்பெண் பட்டியலில் ஒரே மதிப்பெண் பெற்ற பல விண்ணப்பதாரர்களை தேர்வு செய்யும் முறை:-

தெரிவுப்பட்டியல் / மதிப்பெண் வரிசைப் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எழுத்துத் தேர்வு, உடல் திறனறிவுத் தேர்வு மற்றும் NSS/NCC/ Sports/Games–க்கான மதிப்பெண்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தயார் செய்யப்படும். ஒரே மாதிரியான மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் பெற்றிருப்பின் அவர்களின் பிறந்த தேதியின் அடிப்படையில் வயதில் மூத்தவர் முதலில் இடம் பெறுவார். அவ்வாறு பிறந்த தேதியும் ஒன்றாக இருப்பின் எழுத்துத் தேர்வில் எவர் அதிக மதிப்பெண் பெற்றுள்ளாரோ அவர் முதலில் இடம் பெறுவார். அவ்வாறு எழுத்துத் தேர்விலும் ஒரே மாதிரியான மதிப்பெண் பெற்றிருந்தால் எவர் முதலில் விண்ணப்பம் அனுப்பியிருந்தாரோ அவர் முதலில் இடம் பெறுவார்.

24. மருத்துவத் தேர்வு:

உடல் திறன் தேர்வு, எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் பெறும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள காலியிடங்களுக்கு வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி தகுதியானவர்கள் மட்டுமே மருத்துவத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். தமிழக அரசின் ஆணைகளின் படி கீழ்கண்ட மருத்துவ குறைபாடு உள்ளவர்கள் இப்பதவிக்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

(அ) விண்ணப்பதாரர் உடல் ரீதியாக எவ்வித உடல் குறைபாடும் அல்லது திறன் குறைபாடும் அற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் Knock Knees, Bow Legs, Flat Foot உள்ளவராக இருக்கக் கூடாது.

(இ) விண்ணப்பதாரர் திக்குவாய் உள்ளவராக (Stammering) இருக்கக் கூடாது

(ஈ) கீழ்கண்டவாறு கண் பார்வை உடையவராக இருத்தல் வேண்டும்.

| | | வலது கண் | | இடது கண் |
|---|---|---|---|---|
| (i) | தூரப்பார்வை | 6/6 | (Snellen) | 6/6 |
| (ii) | கிட்டப்பார்வை | 05 | (Snellen) | 05 |

(iii) இரண்டு கண்களும் முழு வீச்சு பார்வை உடையதாக இருத்தல் வேண்டும்.

(iv) வண்ண குறைபாடு, மாலைக்கண், ஒற்றைக்கண், புரை உள்ள கண் அல்லது இரப்பை ஆகியவை குறைபாடுடையவை ஆகும். லேசர் அறுவை சிகிச்சை, லாசிக் / எக்ஸிமர் லேசர் அறுவை சிகிச்சை எந்தவொரு கண்ணிலும் செய்யப்பட்டு அதன் மூலம் கண் பார்வை தகுதி பெற்றிருந்தால் அவர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

(v) சரி செய்ய முடியாத வியாதிகள், காக்காய் வலிப்பு, நரம்பு, மூளை சம்பந்தப்பட்ட வியாதிகள் அதாவது புற்று நோய், எய்ட்ஸ், இதயம்/ நுரையீரல் வியாதிகள் உள்ளவர்கள் மருத்துவ ரீதியாக தகுதியற்றவர்களாக கருதப்பட்டு தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

(உ) இம் மருத்துவ பரிசோதனை இத்தேர்வுக்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும் மருத்துவ வல்லுநர்களை கொண்ட குழுமத்தால் செய்யப்படும். அக்குழுமத்தின் முடிவே இறுதியானதாகும்.

25. விபத்து, உயிரிழப்பு, உடல்நல பாதிப்பு:

பல்வேறு தேர்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல்நல பாதிப்பு மற்றும் காயங்களுக்கு சிறைத்துறையோ, தேர்வுக் குழுமமோ, அரசோ பொறுப்பேற்காது.

26. விண்ணப்பத்தை அனுப்பக் கடைசி நாள் :

விண்ணப்பபடிவத்தை அதில் குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்தி செய்து பின்வரும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ 04-03-2008 அன்று மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பதாரர்கள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

"தலைவர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
எண். 807, அண்ணா சாலை, 2வது மாடி,
பெ.தெ.லீ. செங்கல்வராய நாயக்கர் மாளிகை,
(எல்.ஐ.சி. எதிரில்), சென்னை - 600 002."

27. தேர்வு முடிவுகள் :

தேர்வு முடிவுகள் **www.tn.gov.in/tnusrb** என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். இணையதளத்தில் முடிவுகள் வெளியிடப்படும் செய்தி நாளிதழ்களில் அறிவிக்கப்படும். தேர்ச்சி பெறாதவர்களுக்கு தனித்தனியாக தேர்வு முடிவுகள் அனுப்பப்படமாட்டாது.

தலைவருக்காக,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை - 600 002.